திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட் கோட்டூர் ஒன்றியம், திருமக்கோட்டையில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை முழு நேர மருத்துவமனையாக ஆக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,94,51,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. விவாதம் 22-11-2004 அன்று தொடரும்.

9. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 22-11-2004 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 22-11-2004 (திங்கட்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

[2004 நவம்பர் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

22-11-2004 (திங்கட்கிழமை) அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (22-11-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

29. 2002-2003 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [(1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)] (தமிழ், ஆங்கிலம்)

30. 2002-2003 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [(1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)] (தமிழ், ஆங்கிலம்)

31. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆணடு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கை மற்றும் ஏனைய தாள்கள்

25. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பதாவது அறிக்கை (2003-2005).